

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.7.2024) முகாம் அலுவலகத்தில், காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, எழுதிய "போட்டித் தேர்வு – பதினைந்தும் புதிது" என்ற புத்தகத்தை வெளியிட காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, காவல்துறை தலைவர் டாக்டர் கே.ஏ. செந்தில் வேலன், மற்றும் முனைவர் இரா. திருநாவுக்கரசு, அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா தலைமையில் ஊட்டி வர்கி தயாரிப்பாளர்கள் நலச் சங்கத்தின் நிர்வாகிகள் முகம்மது பரூக், பயிஸ், பைசல், திருமதி. மிஷ்ரா ஆகியோர் சந்தித்து, ஊட்டி வர்கிக்கு ஒன்றிய அரசின் புவிசார் குறியீடு (Geographical Indication Registry) வழங்கப்பட்டதற்கான சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

# கொல்லிமலையில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடுகட்ட ஆணை!

## கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், ஜூலை 22 -

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஒன்றியம், செங்கரை, எடப்புளிநாடு, அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 34 பயனாளிகளுக்கு ரூ.1.19 கோடி மதிப்பில் வீடுகட்டுவதற்கான வழங்கும் விழா நடைபெற்றது. சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி முன்னிலை வகித்தார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை பார்வையிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 34 பயனாளிகளுக்கு ரூ.1.19 கோடி மதிப்பில் வீடுகட்டு வதற்கான ஆணைகளை வழங்கினார்.

விழாவில் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி பேசுகையில், தமிழ்நாடு முதல்வர் அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தைசெயல்படுத்தினார். நகரப்பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்திற்கு மக்களிடையே கிடைத்த வரவேற்பினை அடுத்து, அதனை தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலும் நடைமுறைப் படுத்திட "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை ஊரகப் பகுதிகளிலும் விரிவுபடுத்தி தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் மக்கள் பயன்பெறும் வகையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் அரசின் அனைத்து 15 துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று 30 தினங்களுக்குள் தீர்வு காணும் வகையில் தமிழக முதல்வரின் நேரடிக் கண்காணிப்பில் சிறப்பு முகாம்கள் நடத்தப் படுகிறது. இதனை அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் ஏழை, எளிய மக்களுக்கு வீடு கட்டித்தர ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்றைய தினம் இப்பகுதியில் 34 பயனாளிகளுக்கு ரூ.1.19 கோடி மதிப்பில் வீடுகட்டுவ தற்கான ஆணைகளை வழங்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் விண்ணப்பத்தின் அடிப்படையில் வீடுகட்ட ஆணைகள் கட்டாயம் வழங்கப்படும். தமிழக மக்களுக்காக பெண்கள், மாணவ மாணவிகளுக்கான உயர்கல்வி உதவித் தொகை, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அனைத்து பகுதிகளிலும் சாலை மேம்படுத்திட முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்காக தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்.

மேலும், கொல்லிமலை பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி 5 செல்போன் டவர்கள் அமைக்கப்பட்டுள்ளது. இன்றைய காலத்தில் இணையதள வசதி அனைவருக்கும் மிக முக்கிய ஒன்றாகும். அனைத்து பகுதிகளிலும் சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் மேம்படுத்தப் பட்டு வருகிறது. எனவே, அரசின் திட்டங்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று அவர் பேசினார்.

தொடர்ந்து, விவசாயி காளி அவர்களுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பில் தனிநபர் நிலத்தில் கிணறு அமைப்பதற்கான ஆணை, ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் பைல்நாடு பகுதியில் கதிர் அடிக்கும் களம் அமைக்க ஆணை, 4 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.6.25 இலட்சம் கடனுதவிகளை அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் செந்தில் முருகன், அசோக்குமார், மாவட்ட வன அலுவலர் ச.கலாநிதி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், சு.வடிவேல், தமிழ்நாடு மாநில வாணிபக் கழக மாவட்ட மேலாளர் இலாஹிஜான், பழங்குடியினர் திட்ட அலுவலர் தே.பீட்டர் ஞானராஜ், பொதுக்குழு உறுப்பினர் கு காளியப்பன், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஈஸ்வரன், சின்ன வெள்ளையன், பழனிசாமி, செல்வம், முன்னாள் தலைவர் மீனாட்சி சுந்தரம், பெரியசாமி, மாவட்ட பிரதிநிதிகள் ராஜேந்திரன், சின்னத்தம்பி, பொன். சந்திரசேகர், இளைஞரணி அமைப்பாளர் கனகராஜ், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பழனிசாமி, மாணவர் அணி காளிசாமி உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## விருதுநகர் வடக்கு மாவட்டம்

# சிவகாசி மாநகரம்

## 4வது பகுதிக்குட்பட்ட 27 - 6வது பகுதிக்குட்பட்ட 40 ஆகிய வட்டச் செயலாளர் பொறுப்புக்கான தேர்தல்!

### வேட்பு மனு தாக்கல்

விருதுநகர் வடக்கு மாவட்டம், சிவகாசி மாநகரம், 4வது பகுதிக்குட்பட்ட 27 வது வட்டக் கழகச் செயலாளர் ராமராஜ் தனது பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதாலும் 6வது பகுதிக்குட்பட்ட 40வது வட்டச் செயலாளர் அ.சண்முகம் அவர்கள் வயது மூப்பின் காரணமாக செம்மையாக கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால் அவரை அப்பொறுப்பிலிருந்து விடு விக்கப்படுவதாலும்;

சிவகாசி மாநகரம், 4வது பகுதி, 27வது வட்டச் செயலாளர் மற்றும் 6வது பகுதி, 40வது வட்டச் செயலாளர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி,

**இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2024 ஜூலை 24 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ளவேண்டும்.**

**தகுதி விவரம்**

கடந்த 14 ஆவது தேர்தலின்பொழுது உறுப்பினராய் பதிவு செய்திருத்தல் வேண்டும் (14ஆவது தேர்தலின்பொழுது உறுப்பினராய் பதிவு செய்த உறுப்பினர் உரிமைச் சீட்டின் நகல் [ஜெராக்ஸ்] வேட்புமனுவுடன் இணைக்க வேண்டும்). மேலும், அவர்கள் தற்போது சம்பந்தப்பட்ட வட்டக்கிளையின் உறுப்பினராய் இருத்தல் வேண்டும்.

**வேட்புமனுக் கட்டண விவரம்**

**வட்டச் செயலாளர் பொறுப்புக்கான வேட்புமனுக் கட்டணம்: ரூ.500/–**

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.07.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# ஒருங்கிணைப்புக் குழு

## கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக கழகப் பணிகளை ஒருங்கிணைக்கவும், மேற்பார்வையிடவும் அமைக்கப்பட்ட ஒருங்கிணைப்புக்குழு தனது பணிகளை மிகச் சிறப்பாகச் செய்தது.**

**அதே வகையில் வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு, கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய மாறுதல்கள் – அமைப்பு ரீதியான சீரமைப்புகளை மாண்புமிகு கழகத் தலைவருக்கும் தலைமைக்கும் பரிந்துரைக்கவும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் "ஒருங்கிணைப்புக்குழு" பின்வருமாறு அமைக்கப்படுகிறது.**

மாண்புமிகு **கே.என்.நேரு**

திரு. **ஆர்.எஸ்.பாரதி**

மாண்புமிகு **எ.வ.வேலு**

மாண்புமிகு **தங்கம் தென்னரசு**

மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.07.2024

**மு.க.ஸ்டாலின்**
**தலைவர்,**
**தி.மு.க.**

# நீலகிரி மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

உதகை, ஜூலை 22 -

நீலகிரி மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறுகின்றது என்று மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு. கழக கூட்டம் எதிர்வரும் 25.7.2024 வியாழக்கிழமை காலை 11.30 மணி அளவில் மாவட்ட கழக அவை தலைவர் கே.போஜன் தலைமையில், சுற்று லாத் துறை அமைச்சர் கா.ராமசந்திரன் முன்னிலையில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டப கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.



இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் - நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், கழக மாவட்ட ஊராட்சி நகராட்சி - பேரூராட்சி - ஊராட்சி ஒன்றியம் - ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள் உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனை வரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

**பொருள்:**

நீலகிரி மாவட்டத்திலுள்ள கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடத்துவது குறித்து.

நாடாளுமன்ற தேர்தலில், நீலகிரி மாவட்டத்தில் கழகம் வெற்றி பெற உழைத்த கழக நிர்வாகிகள் - செயல்வீரர்கள் மற்றும் வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தல்.

கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை கலைஞர் தமிழ் சங்கம் மற்றும் மாவட்ட கால்பந்து கழகம் இணைந்து நடத்தும் தென்னிந்திய அளவிலான மாபெரும் மின்னொளி ஐவர் கால்பந்து போட்டி புதுக்கோட்டை அலுவலர்கள் மன்றத்தில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தகுதி சுற்று ஆட்டத்தை தொடங்கி வைத்தார். நிகழ்வில் கலைஞர் தமிழ் சங்க புதுக்கோட்டை செயலாளரும் கழக விவசாய தொழிலாளர் அணி துணை தலைவருமான த.சந்திரசேகர், கழக வர்த்தக அணி துணை செயலாளர் செ.அசோக் பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் இராசு.சந்தோஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சின்னையா, இராசு.க.கவிவேந்தன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், ராயல் ஆர்.சபா, கலியமூர்த்தி, ஆர்.அசோக், ஆர்.பன்னீர் செல்வம், கந்தர்வக்கோட்டை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் எழில் ராஜா, விராலிமலை தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் போட்டியின் ஒருங்கிணைபாளர்கள் உடனிருந்தனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை சார்பில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், தகைசால் பள்ளிகளில் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் மற்றும் திருவண்ணாமலையில் முதன்மை கல்வி அலுவலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த கல்வி வளாகம் ஆகியவற்றை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், கே.வி.கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நடைபெற்றது. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) கூ.சண்முகம், திருவரங்குளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.